# ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை–6.

## பத்திரிக்கைச் செய்தி

2016-17ம் ஆண்டிற்கான முதுகலைப்பட்டதாரி ஆசிரியர் / உடற்கல்வி இயக்குநர் நிலை - I காலிப்பணியிடங்களுக்கான நேரடி நியமன பணித் தெரிவிற்கு 3375 காலிப் பணியிடங்கள் நிரப்புவதற்கு அறிவிக்கை வெளியிடப்பட்டு 02.07.2017 அன்று போட்டி எழுத்துத் தேர்வு நடைபெற்றது. அதன்பின்னர் தற்காலிக விடைக்குறிப்பு 19.07.2017 அன்று வெளியிடப்பட்டு தேர்வர்களிடமிருந்து ஆட்சேபனைகள் பெறப்பட்டு பாடவல்லுநர்களைக் கொண்டு கூர்ந்தாய்வு செய்யப்பட்டு இறுதி விடைக் குறிப்பு தயார் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் விடைத்தாட்கள் மதிப்பீடு செய்யப்பட்டு தேர்வர்கள் அவர்களின் மதிப்பெண்களை தெரிந்து கொள்ளும் வகையில் ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில் www.trb.tn.nic.in வெளியிடப்பட்டுள்ளது. இதில் 4 விழுக்காடு மாற்றுத்திறனாளிக்கு இடஒதுக்கீடு சார்பாக தொடரப்பட்ட வழக்கு WP.No.13350/2017 மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால் மாற்றுத்திறனாளிகளுக்கான 4 விழுக்காடு இடஒதுக்கீடு முன்னுரிமைக்கான காலிப்பணியிடம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

போட்டி எழுத்துத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களில் இனவாரியான இடஒதுக்கீட்டின்படி தகுதியுள்ளவர்கள் 1:1 என்ற விகிதத்தில் சான்றிதழ் சரிபார்த்தலுக்கு அழைக்கப்பட உள்ளார்கள். சான்றிதழ்கள் சரிபார்க்கும் பணி 9 மாவட்டங்களில் 28.08.2017 மற்றும் 29.08.2017 ஆகிய இரு நாட்கள் நடைபெற உள்ளது. இதற்கான முழுவிவரங்கள் ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில் www.trb.tn.nic.in வெளியிடப்பட்டுள்ளது என்பதை தெரிவிக்கலாகிறது. மேலும் விபரங்களைத் தெரிந்து கொள்ள ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில் பார்க்கவும்.

தலைவர்

11.08.2017